# ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்: தர்கா நகரினை மையப்படுத்திய ஆய்வு

Naseeha M.F. [1] and Milhana U.L. [2]

[1, 2] *Department of Economics and Statistics, South Eastern University of Sri Lanka*

milhanaul@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கைப் பொருளாதாரத்தில் பாரிய பங்காற்றி வரும் ஒரு துறையாக ஆடைக் கைத்தொழில் துறையானது காணப்படுகின்றது. இலங்கையின ஏற்றுமதி வருமானத்தில் முக்கிய பங்களிப்பு செய்து வரும் இத்துறையானது அதிகமானோருக்கு தொழில் வாய்ப்புகளையும் பெற்றுத்தருகின்றது. அந்தவகையில் இத்துறையில் அதிகமான பெண்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தொழிற்படும் இப்பெண் ஊழியர்கள் பல்வேறான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். எனவே இத்துறையில் வேலை செய்யும் பெண்கள் எதிர் கொள்ளும் சவால்களை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல் அவசியமாகும். எனவே இவ்வாய்வானது, தர்காநகர் பிரதேசத்தில் ஆடை உற்பத்தி தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிதலினை பிரதான நோக்கமாக கொண்டு காணப்படுகின்றது. இந்த நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக ஆடை உற்பத்தி தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில் ரீதியான, உடல் ரீதியான மற்றும் சமூக ரீதியான சவால்கள் போன்றவற்றை அடையாளம் காண்பதனை துணை நோக்கங்களாக கொண்டு காணப்படுகின்றது. இவ்வாய்வுக்காக தர்கா நகர் பிரதேசத்தில் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மூன்று தொழிற்சாலைகளில் தொழில் புரியும் 241 பெண் ஊழியர்களில் யோமன் முறையை பயன்படுத்தி 150 பெண் தொழிலாளர்கள் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இவ்வாய்வுக்கான முதலாம் நிலை தரவுகள் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தின் மூலமும் கலந்துரையாடல் மூலமும் பெறப்பட்டன. இத்தரவுகள் விவரண புள்ளிவிபரவியல் மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தொழில் ரீதியான சவால்களில் குறைந்த ஊதியம் மற்றும் தொழில் நிமித்தமான போக்குவரத்து பிரச்சினைகளை அதிகமானவர்கள் எதிர்கொள்கின்றனர். உடல் ரீதியான சவால்களில் உடற் சோர்வினை அதிகமாக எடுத்துக் கூறிய அதேவேளை நோய் வாய்ப்புகளுக்கு உள்ளாவதாகவும் குறித்த சிலர் எடுத்துரைத்துள்ளனர். அவற்றில் அதிகமானோர் தலைவலி மற்றும் மூட்டுவலி போன்ற நோய்களை அடையாளப்படுத்தியுள்ளனர். மேலும் சமூக ரீதியான சவால்களில் அதிகமான பெண்கள் தொழில் மற்றும் குடும்பத்தினை நடுநிலையாக பேண முடியாமை மற்றும் குழந்தை பராமரிப்பு தொடர்பான சவால்களை எதிர்நோக்குவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே அரசு மற்றும் ஊழிய நல சங்கங்கள் இவர்களது குறைந்தபட்ச ஊதியத்தினை அதிகரித்தல், நிறுவனமானது போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளல், மாதாந்த வைத்திய முகாம்களை ஒழுங்கமைத்தல், போதிய விடுமுறை அளிப்பு மற்றும் சிறந்த வேலைச் சூழலை அமைத்துக் கொடுத்தல் போன்றவற்றின் மூலம் ஊழியர்கள் சிறப்பாக செயற்பட வழிவகுக்க முடியும் என பரிந்துரைக்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** *ஆடைக் கைத்தொழில், பெண் தொழிலாளர்கள், தர்கா நகர், சவால்கள்*

## 1. ஆய்வின் அறிமுகம்

ஆடை என்பது ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவும் அவனது கலாசாரத்தினையும் தனித்தன்மையினையும் பிரதிபளிக்கும் ஒரு அடையாளமாகவும் காணப்படுகிறது. ஆரம்பகாலங்களில் கைகளால் தைக்கப்பட்ட ஆடைகளையே மக்கள் பயன்படுத்தி வந்தனர். 1846 ஆம் ஆண்டில் ‘எலியஸ்

குவே' என்பவரால் தையல் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து உலகம் முழுவதும் ஆடை உற்பத்தியானது ஆரம்பமானது. ஆதனை தொடர்ந்து ஆடை கைத்தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு உலக நாடுகள் ஆடை உற்பத்தி ஏற்றுமதி நடவடிக்கைகளிலும் ஈடுபடத் துவங்கியன. 2021 ஆம் ஆண்டின் தரவின் அடிப்படையில் உலகில் ஆடை உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடத்தில் காணப்படுகின்றது. மேலும் உலகில் ஆடை உற்பத்தியில் பாரிய ஏற்றுமதியை மேற்கொள்ளும் நாடாகவும் உலகின் மொத்த ஆடை உற்பத்தியில் 52.2 வீதமான பங்கினை வகிக்கக்கூடிய நாடாகவும் காணப்படுகின்றது. மேலும் சீனாவினைத் தொடர்ந்து ஆடை உற்பத்தியில் முன்னணி நாடுகளாக ஜேர்மனி, பங்களாதேஷ், வியட்னாம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் காணப்படுகின்றன (நிவ்யோர்க் ஸ்பேசஸ், 2022).

அந்த வகையில் இலங்கைப் பொருளாதாரத்தினைப் பொருத்தவரையிலும் ஆடை உற்பத்தியானது முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பினை நல்கும் ஒரு துறையாகவே அமைந்து காணப்படுகின்றது. குறிப்பாக 1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதார கொள்கையினைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் ஆடை உற்பத்தியானது பிரபல்யமடைய ஆரம்பித்தது. மேலும் ஆடைத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டன. இத்துறையானது ஏற்றுமதித் துறையில் மாத்திரமின்றி, தொழில்வாய்ப்பினை வழங்குவதிலும் பாரிய பங்களிப்பினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபர தரவின்படி இத்துறையானது 5.42 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஏற்றுமதி வருமானமாக ஈட்டித்தந்துள்ளதுடன் 990,000 ஊழியர்களையும் உள்வாங்கிக் காணப்படுகின்றது (இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, 2022).

மேலும் ஆடை உற்பத்தி துறையினைப் பொறுத்தவரையில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பானது குறிப்பிடத்தக்கதாக ஓர் முக்கிய அம்சமாகும். இலங்கையில் இத்துறையின் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் முறையே கிட்டத்தட்ட 300,000 மற்றும் 600,000 மக்கள் தொழில் வாய்ப்பினை பெற்றுள்ளனர். இதில் 78 சதவீதமானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர் (ஆசிய அபிவிருத்தி வங்கி, 2020). இதன் அடிப்படையில் நோக்கும் போது இத்துறையில் அதிக பெண் தொழிலாளர்கள் வேலை செய்வதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

எனவே இத்துறையினை பொருத்தவரையில் பெண்கள் அதிகமாக காணப்படுவதனால், அவர்களது நிலை குறித்தும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் ஆய்வினை மேற்கொள்வது முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது. எனவே அந்தவகையில் களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் தர்காநகர் பிரதேசத்தினை மையப்படுத்தி ஆடை உற்பத்தி துறையில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

## 2. இலக்கிய மீளாய்வு

சுகுமாறன் et.al. (2019) பெங்களூரில் உள்ள ஆடை தொழிற்சாலையில் காணப்படும் பெண் ஊழியர்களின் நோயுற்ற தன்மையினை மதிப்பிடுவதை நோக்காக கொண்டு மேற்படி ஆய்வு நடத்தப்பட்டது. ஆடை தொழிற்காலையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களிடையே குறுக்கு வெட்டு விளக்க ஆய்வு நடத்தப்பட்டது. கட்டமைக்கப்பட்ட கேள்வித் தாளை பயன்படுத்தி ஒரு நேர்காணல் நடத்தப்பட்டதுடன் உயரம் எடை என்பவற்றை அளக்க மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. இத்தரவுகள் MS Excel மற்றும் SPSS மென்பொருளை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் மிகவும் பொதுவான பிரச்சினையாக தசை கூட்டு கோளாறுகள் கண்டறியப்பட்டுள்ளது. வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் ஆரம்ப கால நோயறிதல் போன்ற விடயங்கள் கண்டறிப்பட்டுள்ளன.

சுகைல் et.al (2017) ஆம் ஆண்டு பங்களாதேஷில் பெண் ஆடை தொழிலாளர்களின் உடல் ஆரோக்கிய பிரச்சினைகள் மற்றும் உளவியல் பிரச்சினைகளை கண்டறிவதை நோக்காக கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. டாக்கா, காசிப்பூர் மற்றும் நாராயங்கஞ் மாவட்டங்களை மையமாக கொண்ட

இவ்வாய்வில் பெண்களின் உடல் உள பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு வினாதாள்கள் உருவாக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல் போன்ற விடயங்களுடன் தொழிலாளர்களின் நிலையினை மேம்படுத்துவதற்கான விடயங்கள் பற்றி பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

தீபதி மற்றும் பொபி (2012) ஆம் ஆண்டு பெண் ஆடை தொழிலாளர்களின் மனநிலை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய காரணிகளை இனங் காண்பதனை நோக்காக கொண்டு ஆய்வினை மேற்கொள்ளப்பட்டுள்ளனர். இந்தியாவில் உள்ள தனியார் ஆடை தொழிற்சாலைகளில் மூன்று அலகுகளாக ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. நேர்காணல் மற்றும் வினாக்கொத்து ஆகிய முதலாம் தர தரவு சேகரிப்பினை பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் பெண் தொழிலாளர்களின் மனநிலை மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட காரணிகள் கண்டறியப்பட்டு, அவற்றை மேம்படுத்துவதற்காக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தயீபா et.al (2021) பெண் ஆடை தொழிலாளர்களிடையேயான குழந்தை பராமரிப்பு சேவைகளை பயன்படுத்துவதற்கான தடைகளை கண்டறிவதை நோக்காக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் நேர்காணல் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாகொத்துக்களை பயன்படுத்தி சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் குழந்தை பராமரிப்பு மையங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதுடன் அவற்றை மேலும் சுகாதார வசதிகளுடன் மேம்படுத்தப்பட வேண்டும் என்பன போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

பேகம் et.al (2010) ஆம் ஆண்டு பங்களாதேஷில் பெண் ஆடை தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுவதற்கு காரணமான பல்வேறு காரணிகளை ஆய்வு செய்வதனை நோக்காக கொண்டு டாக்கா நகரப்பகுதியில் உள்ள மிர்பூர் பகுதியில் 03 தொழிற்சாலைகள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு நடத்தப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் பெண் தொழிலாளர்கள் தொழிற்சாலையில் தங்கள் சக ஊழியர்களால் அல்லது காவர்துறையினரால் அல்லது மஸ்தான்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். பெண்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாக தொலைதொடர்புப் பிரச்சினை காணப்படுகின்றது. கல்வி அறிவு இல்லாத பெண்கள் அதிகம் சுரண்டப்படுகின்றனர் போன்ற முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

சில்வா et.al (2011) இலங்கையில் பெண் ஆடை தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் வேலைவாய்ப்பு, உடல் நல மற்றும் சுகாதார பிரச்சினைகளை கண்டறிவதை நோக்காகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கான தரவுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட கேள்வித்தாள்கள் மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் இலங்கையில் ஆடை துறையில் தொழில்புரியும் அதிகமான பெண்கள் தசைக்கூட்டு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

**3. ஆய்வு நோக்கம்**

களுத்துறை மாவட்டத்தில், தர்காநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடை தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் இவ்வாய்வின் துணை நோக்கங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- பெண் தொழிலாளர்களின் தொழில் ரீதியான சவால்களை அடையாளம் காணல்
- பெண் தொழிலாளர்களின் உடல் ரீதியான சவால்களை அடையாளம் காணல்
- பெண் தொழிலாளர்களின் சமூக ரீதியான சவால்களை அடையாளம் காணல்

**4. ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது முதலாம் நிலை தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அந்தவகையில் இவ்வாய்வுக்கான தரவுகள் கட்டமைக்கப்பட்ட வினாகொத்து, நேரடி அவதானிப்பு மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற வழிமுறைகள் மூலம் பெறப்பட்டுள்ளன. தர்கா நகரில் காணப்படுகின்ற தொழிற்சாலைகளில் நோக்க மாதிரியின் அடிப்படையில் மூன்று தொழிற்சாலைகள் தெரிவு செய்யப்பட்டு அம்மூன்று தொழிற்சாலைகளிலும் மொத்தமாக பணிபுரியும் 241 பெண் ஊழியர்களில் , யோமன் முறையை பயன்படுத்தி 150 பெண் ஊழியர்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி, முதலாவது தொழிற்சாலையில் பணிபுரியும் 12 பெண் ஊழியர்களும், இரண்டாவது தொழிற்சாலையிலிருந்து 29 பெண் ஊழியர்களும், மூன்றாவது தொழிற்சாலையில் பணிபுரியும் 109 பெண் ஊழியர்களும் விகிதாசார அடிப்படையில் எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளானது விபரண பகுப்பாய்வினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**5. ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆடை உற்பத்தி தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் குறித்து நோக்கும் போது அவர்களது கல்வி நிலை, திருமண நிலை, தொழில் பங்கு மற்றும் குடும்ப வருமான நிலை என்பவற்றினை ஆராய்கையில்,

ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களின் கல்வி நிலையினை பொறுத்தவரையில் 57.33 வீதமானவர்கள் சாதாரணம் வரை கல்வி கற்றவர்களாகவும் 23.33 வீதமானவர்கள் உயர்தரம் கற்றவர்களாகவும் 12 வீதமானவர்கள் 6 தொடக்கம் 10 ஆம் ஆண்டு வரை கற்றவர்களாகவும் 5.33 வீதத்தினர் உயர் கல்வி கற்றவர்களாகவும் 2 வீதமானவர்கள் 1 தொடக்கம் 5 ஆம் ஆண்டு வரை கற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனடிப்படையில் நோக்கும் போது ஆடை உற்பத்தியில் ஈடுபடும் அதிகமான பெண்கள் சாதாரண தர கல்வியை பூர்த்தி செய்தவர்களாகவே காணப்படுகின்றனர் என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இவர்களில் 67.33 சதவீதமான பெண்கள் திருமணமானவர்களாகவும், 32.67 வீதமானவர்கள் திருமணமாகாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களில் 48.67 வீதமான பெண் தொழிலாளர்கள் ஆடை தைத்தலிலும் 28 வீதமானவர்கள் ஆடை உற்பத்தி தொடர்பான கணக்காளர் மற்றும் ஆடை வெட்டுவதற்கான உதவியாளர்கள் மற்றும் ஏனைய உதவியாளர்கள் போன்ற வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். இவர்களில் 1.33 சதவீதமான குறைந்தளவு பெண்களே ஆடை வெட்டுதலில் ஈடுபடுகின்றனர். ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களில் வருமான நியையினை பொறுத்தவரையில், 48.67 வீதமான பெண்களின் வருமானமானது அவர்களின் குடும்பத்தின் பிரதான வருமானமாக காணப்படுகின்றது. அத்ததுடன் 51.33 வீதமான பெண் தொழிலாளர்களின் வருமானமாது துணை வருமானமாக காணப்படுகின்றது.

அட்டவணை 1. பெண் ஆடைத் தொழிலாளர்களின் சமூக நிலை

| காரணிகள் | வகைப்பாடு | வீதம் |
|---|---|---|
| கல்வி நிலை | தரம் 1 – 5 | 2 |
| | தரம் 6 – 10 | 12 |
| | சாதாரண தரம் | 57.33 |
| | உயர் தரம் | 23.33 |
| | உயர் கல்வி | 5.33 |
| திருமண நிலை | திருமணமாணவர் | 67.33 |

| | | |
|---|---|---|
| | திருமணமாகாதவர் | 32.67 |
| தொழில் பங்கு | ஆடை வெட்டுதல் | 1.33 |
| | ஆடை தைத்தல் | 48.67 |
| | தரம் பரிசோதிப்பவர் | 9.33 |
| | நூல் வெட்டுதல் | 2 |
| | மேற்பார்வையாளர் | 4 |
| | பொதியிடுபவர் | 6.67 |
| | வேறு | 28 |
| வருமான நிலை | பிரதான வருமானம் | 44.22 |
| | துணை வருமானம் | 55.78 |

மூலம்: கள ஆய்வு, 2022


**5.1 ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் தொழில் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள்**

தொழில் ரீதியான சவால்களை பொறுத்தவரையில் 35.8 வீதமானவர்கள் குறைந்த ஊதியம் தொடர்பான பிரச்சினையினை எதிர்நோக்குகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் நூல் வெட்டுதல் மற்றும் ஏனைய வேலைகளுக்கு துணையாக செயற்படுபவர்களாக காணப்படுகின்றனர். அத்தோடு இப்பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் போக்குவரத்துக்காக வருமானத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியை இழக்க வேண்டி உள்ளதனால் வருமானம் போதியதாக இல்லை எனவும் ஏனைய பணிகளில் ஈடுபடுவோரும் எடுத்துக்காட்டியுள்ளனர். மேலும் குறைந்த ஊதியம் காணப்படுவதனால் வருமானத்தில் சேமிப்பினை மேற்கொள்வது சாத்தியமற்றதாக காணப்படுவதுடன் கடன்களையும் பெற நேர்வதாக இவர்கள் கலந்துரையாடலின் போது எடுத்துரைக்கின்றனர்.

மேலும் 32.41 வீதமானவர்கள் போக்குவரத்து சிக்கலினை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் தொழில் புரியும் இடத்திற்கு மிகவும் தொலைவிலிருந்து வேலைக்கு வருபவர்களாக காணப்படுகின்றனர். மேலும் தற்கால பொருளாதார நெருக்கடியின் பின்னர் போதிய போக்குவரத்து வசதியின்மையால் உரிய நேரத்திற்கு வேலைக்கு சமூகமளித்தல் மற்றும் வேலை விட்டு வீட்டுக்கு திரும்புதல் போன்றன சிக்கலாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இன்னும் 8.95 வீதமானவர்கள் தொடர்ச்சியான வேலை காரணமாக அழுப்புத்தன்மைக்கு உள்ளாவதாகவும் 6.79 வீதமானவர்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடிகாலத்தில் ஒரு சில சலுகைகள் கிடைக்காமையும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக தொழிலில் நிலைத்த தன்மை குறைவு போன்ற அவர்கள் எதிர்நோக்குகின்ற வேறு சவால்களாக அடையாளப்படுத்துகின்றனர். அத்தோடு நீண்ட வேலை நேரம், விடுமுறை எடுப்பதில் கடினம் மற்றும் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பின்மை போன்ற சவால்களும் தொழில் ரீதியாக அவர்கள் முகங்கொடுக்கும் சவால்களாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

வரைபு 1: பெண் தொழிலாளர்களின் தொழில் ரீதியான சவால்கள்





மூலம்: கள ஆய்வு, 2022

**5.2. ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் உடல் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள்**

ஆடை உற்பத்தியில் ஈடுபடக் கூடிய தொழிலாளர்களில் 65.19 வீதமானவர்கள் போதிய ஓய்வின்மையினை எதிர்நோக்குகின்றனர். 29.28 வீதமானவர்கள் 29.28 வீதமானவர்கள் உடற்சோர்வினையும் எதிர்நோக்குகின்றனர். மேலும் 5.52 வீதமானவர்கள் தொடர்ச்சியான வேலை காரணமாக நோய்வாய்ப்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் தெளிவாக நோக்கலாம்.


வரைபு 2: பெண் தொழிலாளர்களின் உடல் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள்




மூலம்: கள ஆய்வு, 2022

#### 5.2.1. ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நோய்வாய்ப்புகள்

வரைபு 3: ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நோய்வாய்ப்புகள்





மூலம்: கள ஆய்வு, 2022

பெண் தொழிலாளர்களில் 44.26 வீதமான பெண்கள் அதிகமாக தொடர் வேலை காரணமாக தலைவலிக்கு உள்ளாவதாகவும், 24.59 வீதமான பெண்கள் மூட்டு வலிக்கு உள்ளாவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் 12.3 வீதமான பெண்கள் முதுகு வலிக்கு உள்ளாவதாகவும், 9.02 வீதமான பெண்கள் கண்நோய்களுக்கும், 5.74 வீதமான பெண்கள் இரத்த அழுத்தத்திற்கு உள்ளாவதாகவும் கண்டறியப்பட்டுள்ளன. அத்துடன் 4.1 வீதமானவர்கள் சுவாச நோய்கள், மன அழுத்தம், தொற்று நோய்கள் போன்ற வேறு நோய்களுக்கு உள்ளாவதாகவும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

### 5.3. ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் சமூக ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள்

ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களில் 26.43 வீதமான பெண்கள் தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை நடுநிலையாக பேண முடியாதுள்ளது என அடையாளப்படுத்தியுள்ளனர். மேலும் 21.43 வீதமானவர்கள் வேலைக்கு செல்வதால் குழந்தை பராமரிப்பு தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும், 18.93 வீதமான பெண்கள் கலாச்சார நிகழ்வுகளில் தொடர்ச்சியாக பங்கெடுக்க முடியாதுள்ளது எனவும், 11.43 வீதமான இளம் பெண்கள் தாங்கள் வேலை செய்வதினை அதிகமாக குடும்ப உறுப்பினர்கள் விரும்பவில்லை எனவும் எடுத்துரைத்துள்ளனர். அத்துடன் 11.07 வீதமான ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் பாதுகாப்பு குறைபாடுகளை எதிர்நோக்குவதாக பதிலளித்துள்ளனர். இதற்கு காரணமாக முறையான போக்குவரத்து வசதியின்மையை நேர்காணலின் போது எடுத்து காட்டியுள்ளதோடு, 10.71 வீதமான பெண்கள் அனுபவமின்மை, பாகுபாடு போன்ற வேறு சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாவதாகவும் இவ்ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வரைபு 4: பெண் தொழிலாளர்களின் சமூக ரீதியான சவால்கள்




மூலம்: கள ஆய்வு, 2022

### 6. முடிவுரை

இவ்வாய்வானது, தர்காநகர் பிரதேசத்தில் ஆடை உற்பத்தி தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக விளக்குகின்றது. அதனடிப்படையில், ஆடை உற்பத்தி தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் தொழில் ரீதியான, உடல் ரீதியான மற்றும் சமூக ரீதியான சவால்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின் அடிப்படையில் தர்காநகர் பிரதேசத்தில் ஆடை உற்பத்தி தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் தொழில் ரீதியான சவால்களை பொறுத்தவரையில், அதிகமானவர்கள் குறைந்த ஊதியம் மற்றும் போக்குவரத்து சிக்கல் போன்ற சவால்களை எதிர்நோக்குகின்றனர் என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், உடல் ரீதியான சவால்களை பொறுத்தவரையில் அதிகமானவர்கள் போதிய ஓய்வின்மை, உடற்சோர்வு போன்றவற்றாலும், இன்னும் சிலர் தொடர்ச்சியான வேலைப்பழு காரணமாக நோய்வாய்ப்படல் போன்ற சவால்களை எதிர்நோக்குகின்றனர். இதனடிப்படையில் தொழிலாளர்கள் தலைவலி, மூட்டு வலி, முதுகு வலி, கண் நோய்கள் மற்றும் வேறு நோய்களினாலும் பாதிப்படைந்துள்ளது ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

சமூக ரீதியான சவால்களை பொறுத்தவரையில், அதிகமான பெண்கள் தொழில் மற்றும் குடும்பத்தினை நடுநிலையாக பேண முடியாமை மற்றும் குழந்தை பராமரிப்பு தொடர்பான சவால்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### 7. பரிந்துரைகள்

ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் தொழில் ரீதியாக எதிர்நோக்கும் முக்கிய சவாலாக போக்குவரத்து சிக்கல் காணப்படுகின்றது. எனவே குறித்த நிறுவனம் அதனை கவனத்தில் எடுத்து இதற்காக அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன், அவர்கள் எதிர்கொள்ளும் தொழில் ரீதியான முக்கியமான சவாலாக ஊதிய குறைபாடு காணப்படுகின்றது. எனவே அவர்களது வாழ்க்கையின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாமல் அவர்கள் தவிக்கின்றனர். எனவே அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச ஊழிய தொகையான 16000 ரூபாவிலிருந்து அதன் குறைந்தபட்ச தொகையினை மேலும் அதிகரிப்பதன் மூலம் ஊழிய வருமானத்தை அதிகரிக்கலாம். மேலும் நிறுவனமானது ஊக்கப்படுத்தல் தொகைகள் போன்றனவற்றையும் மேற்கொள்ளலாம். அத்தோடு சக ஊழியர்களின் ஒத்துழைப்பின்மை மற்றும் நீண்ட நேர வேலையின் காரணமாக ஏற்படும் அலுப்பு போன்ற சவால்களுக்கு குறித்த நிறுவனம் ஊழியர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் குழுவாக தொழில்புரியும் சூழ்நிலைகளை உருவாக்குவதன்

மூலம் அவர்களது மன நிலைமையினை மாற்ற முடிவதுடன் அவர்களுக்குள் இணக்கமான ஒரு நிலையும் ஏற்படும்.

மேலும், ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் உடல் ரீதியான சவால்களாக ஓய்வின்மை, தொடர் வேலை காரணமான நோய்வாய்ப்படல், உடற்சோர்வு ஏற்படுகின்றன. எனவே, குறித்த நிறுவனம் இது தொடர்பில் கருத்தில் எடுத்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் தங்களது நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு முறையான வைத்திய ஆலோசனை, மருத்துவ பரிசோதனை முகாம்களை ஏற்படுத்தல் இதன் மூலம் ஓரளவு அவர்கள் எதிர்நோக்கும் உடல் ரீதியான சவால்களை கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன், ஆய்வுப் பிரதேசமான தர்காநகர் பிரதேசத்தில் ஆடை உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூக ரீதியான சவால்களாக பாதுகாப்பு குறைபாடு காணப்படுகின்றது. எனவே குறித்த நிறுவனம் அங்கு வேலை செய்யும் பெண் தொழிலாளர்களது பாதுகாப்பு தொடர்பில் கவனத்தில் எடுப்பதுடன், தாங்கள் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பான கருத்து பெட்டி மூலம் அவர்களது பிரச்சினைகளை இணங்கண்டு நிவர்த்தி செய்ய வேண்டும்.

**நன்றியுரை**

இவ்வாய்வினை திறம்பட மேற்கொள்ள துணைபுரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ள இத்தால் கடமைப்பட்டுள்ளோம். அந்தவகையில் இவ்வாய்வுக்கான தரவுகளை தந்துதவிய ஆடைத்தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கும் அவர்களது வேலைகளினிடையே அவர்களை அணுக அனுமதி தந்துதவிய நிறுவன முகாமைத்துவத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உசாத்துணைகள்**

Asian Development Bank. (2020, August 31). *Securing Women's Place in Sri Lanka's Apparel Industry.* Development Asia. https://development.asia/insight/securing-women-place-sri-lankans-apparel-industry

Begum, F., Ali, R.N., Hossain M.A. & Shahid S.B. (2010). Harassment of women garment workers in Bangladesh. *Journal of the Bangladesh Agricultural University. 8(2)*: 291–296.

De Silva, V., Lipscomb, H., & Ostbye, T. (2011). Occupational health problems among female garment factory workers in Sri Lanka. *Occupational and Environmental Medicine. 68*(1). http://dx.doi.org/10.1136/oemed-2011-100382.422

New York Spaces. (2022). *Top Garment manufacturing countries in the world-2021.* https://newyorkspaces.com/top-garment-manufacturing-countries-in -world-2021/

Shanbhag, D. & Joseph, B. (2012). Mental health status of female workers in private apparel manufacturing industry in Bangalore city, Karnataka, India. *International Journal of Collaborative Research on Internal Medicine & Public Health. 4*(12), 1893-1900.

Shohel, M. & Rajath, D. V. (2017). Safety Issues of Female Workers of Garment Industry in Gazipur District, Bangladesh. *Journal of Applied and Advanced Research*. *2(4)*: 265–269.

Sukumaran, N., Vidusha, K., & Manjunatha, S. (2019). Health problems prevailing among the female workers in a garment factory, Bengaluru. *International Journal of Advanced Community Medicine. 2*(1) 37-40. https://doi.org/10.33545/comed.2019.v2.i1a.08